திரு. கொளத்தூர் கோதண்டம் : ஒரு முன்சிப் கோர்ட் ஆரம்பிக்க வேண்டுமென்றால் என்ன அடிப்படைத் தேவைகள் இருக்கவேண்டும்? அந்தத் தேவைகள் இருந்தால் உடனடியாக ஒரு கோர்ட் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மதுராந்தகத்திற்குப் பக்கத்தில் செங்கற்பட்டில் முன்சிப் கோர்ட் இருக்கிறது. மதுராந்தகம் அதிலே இணைக்கப்பட்டிருக்கிறது. தனியாக நீதிமன்றம் வேண்டுமென்றால் ஒரு நீதிமன்றத்திற்குத் தேவையான அளவுக்கு வழக்குகள் அதிகமாக இருக்கவேண்டும் என்று உயர்நீதி மன்றம் விரும்புகிறது.

Bleeding Madras variety of handloom cloth.

* 62 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Bleeding Madras variety of handloom cloth is in stock for more than 2 years in the co-operative societies in North Arcot district; and

(*b*) whether quite a large number of handloom weavers are suffering for want of employment thereby and also for want of raw materials?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

சிறு ரகக் கார்கள் உற்பத்தி

* 63 வின.—திரு. எஸ். ஜே. ராமசாமி
திரு. வை. சுவாமிநாதன் :] மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968-ம் ஆண்டில் நமது மாநிலத்தில் சிறிய ரக கார் உற்பத்தி செய்ய அனுமதி கோரி விண்ணப்பங்கள் தமிழக அரசுக்கு வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள சிறிய காரின் விலை என்ன?

(உ) உற்பத்தி செய்வதற்கு எந்த ஆண்டிலிருந்து வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) & (உ) வினாக்களுக்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : முன்பு இருந்த தொழிலமைச்சர் அவர்கள், சிறிய கார் தொழிற்சாலையை சென்னை மாநிலத்தில் அமைக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லா மாநில அரசுகளும், இப்படிப்பட்ட ஒரு சிறிய கார்த் தொழிற்சாலையைத் தொடங்குவது என்று திட்டக்குழுவும் மத்திய அரசும் முடிவு செய்தால்

1969 பிப்ரவரி 25]

அதை தங்கள் தங்கள் மாநிலத்தில் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதே போன்று நாமும் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டு வருகிறோம்.

திரு. வை. சுவாமிநாதன் : ஆஸ்திரேலியக் கம்பெனி ஒன்று ஆண்டிற்கு 12,000 கார்களைத் தயாரித்துக் கொடுப்பதாக அறிவித்திருக்கிறது. அந்தத் தொழிற்சாலையை நம்முடைய மாநிலத்தில் ஆரம்பிப்பதற்கு மத்திய அரசாங்கத்துடன் பேசி நான்காவது திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வழி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட ஒரு தகவல் மத்திய அமைச்சரவைக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும், அதைப்பற்றி மத்திய அரசு விரிவான விளக்கங்களைக் கேட்டிருப்பதாகவும் காலைப் பத்திரிகையில் பார்த்தேன்.

திரு. மு. ச. சிவசாமி : நம்முடைய மாநில அரசு கேட்டுக் கொண்டிருக்கும் சிறிய கார் தொழிற்சாலைக்கு மத்திய அரசு அனுமதி கொடுத்தால் அந்தத் தொழிற்சாலையை, வளரும் நகரமாகிய தூத்துக்குடியில் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அங்கத்தினர் அவர்களுடைய ஆசை வரவேற்கத்தக்கது.

திரு. ஆர். நாகசுந்தரம் : சிறிய கார் தொழிற்சாலையைப் பற்றி டெல்லியிலும், இங்கும் அடிக்கடி பேசப்படுகிறது. இதற்கு லைசென்ஸ் வழங்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கிறதா அல்லது மத்திய அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : லைசென்ஸ் மத்திய அரசுதான் வழங்க வேண்டும். சிறிய கார் உற்பத்தியைப்பொறுத்து பல பிரச்சினைகள் எழுப்பப்படுகின்ற காரணத்தால் மத்திய அரசு பல ஆண்டு காலமாக கருத்து வேறுபாடுகளுக்கு உட்பட்டு முடிவு எடுக்க முடியாத நிலையில் இருக்கிறது.

திரு. டி. மார்டின் : தமிழ்நாட்டில் உள்ள சிறந்த விஞ்ஞானி திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் 5,000 ரூபாய் செலவில் சிறிய காரை உற்பத்தி செய்ய முடியும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் இந்த அரசுக்கு ஏதேனும் மனுச் செய்துள்ளார்களா? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கருத்து தெரிவித்திருப்பதைப் பற்றித் தகவல் இல்லை. இந்த அரசாங்கத்திற்கு அதைப் பற்றிய திட்டம் அனுப்பப்பட்டால் நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

மேலூர் வட்டம் பெரியருவி நீர்த்தேக்கம்

* 64 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் வட்டத்தில் அமைக்கப்பெற்ற பெரியருவி நீர்த்தேக்கம் பாசனத்திற்குப் பயன்படுகிறதா ?